**செய்தி வெளியீடு எண்: 051** **நாள்: 21.01.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (21.1.2019) சென்னை, எழும்பூர், மாநில மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பள்ளி கல்வித்துறை, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ஒருங்கிணைப்புடன் அங்கன்வாடி மையங்களில் முன்னோடி திட்டமாக மாண்டிசோரி கல்வியை அடிப்படையாக கொண்ட LKG மற்றும் UKG வகுப்புகளை துவக்கி வைத்தார்கள்.

ஏழை எளிய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் ஆங்கில வழி முன்பருவக் கல்வி பயில வேண்டும் என்பதற்காக தங்கள் சக்திக்கும் மீறி அதிக கட்டணங்கள் செலுத்தி தனியார் பள்ளிகளில் கல்வி பயில்வதற்காக அனுப்பி வைக்கிறார்கள். எனவே, ஏழை எளிய பெற்றோர்களின் பொருளாதார சுமைகளை குறைத்திடவும், அக்குழந்தைகளுக்கு சிறந்த முன்பருவக் கல்வி அளித்திட வேண்டுமென்ற உயரிய நோக்கிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, அங்கன்வாடி மையங்களில் மாண்டிசோரி கல்வியை அடிப்படையாக கொண்ட LKG மற்றும் UKG வகுப்புகளை துவக்கும் திட்டத்தை பள்ளி கல்வித்துறை, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ஒருங்கிணைப்புடன் செயல்படுத்திட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தமிழகத்தில் **2,381** அங்கன்வாடி மையங்களில் உள்ள **52,933** குழந்தைகள் பயன்பெறும் வகையில், **32** மாவட்டங்களிலும் அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பள்ளிக்கல்வித் துறை, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை ஒருங்கிணைப்புடன் முன்னோடி திட்டமாக LKG மற்றும் UKG வகுப்புகளை துவக்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கிவரும் **2381** அங்கன்வாடி மையங்கள் சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறையின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் நிர்வாக பொறுப்பிலும், முன்பருவக் கல்வி செயல்பாடுகள் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களின் மேற்பார்வையிலும் இயங்கும். அக்குழந்தைகளுக்கு பாடம் கற்று கொடுத்திட பள்ளிக் கல்வித்துறை ஆசிரியர்களுக்கு சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

மேலும், LKG மற்றும் UKG வகுப்பு பயிலும் குழந்தைகளுக்கு, 4 இணை பள்ளிச் சீருடைகள், காலணிகள், முன்பருவக் கல்வி உபகரணங்கள் கலர் பென்சில்கள், க்ரையான்ஸ்கள், மலைப்பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கு கம்பளி சட்டை, மழைக்கால பூட்ஸ் ஆகிய பொருட்கள் தமிழ்நாடு அரசால் விலையில்லாமல் வழங்கப்படும். அத்துடன் LKG மற்றும் UKG படித்து முடித்தபின் அக்குழந்தைகளுக்கு நிறைவு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அரசு பள்ளிகளில் சேர்ப்பதை ஊக்குவிப்பதுடன், குழந்தைகளின் கற்றல் திறன், ஆங்கிலத்தில் பேசும் மற்றும் எழுதும் திறனும் முன்னேற்றம் பெறும். மேலும், ஏழை எளிய மக்களின் குழந்தைகளும் சிறப்பான ஆரம்ப கல்வி பெற்று வாழ்வில் ஏற்றம் பெற்றிட வழிவகை ஏற்படும்.

இந்த விழாவில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா. வளர்மதி, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் திரு. ஆர். கண்ணன், இ.ஆ.ப., பள்ளி கல்வி இயக்குநர் முனைவர் வி.சி. இராமேஸ்வரமுருகன், தொடக்க கல்வி இயக்குநர் முனைவர் எ. கருப்பசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.1.2019**